தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1982 மார்ச் 1
மாசி 17, துன்மதி,— திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை "

அசைவில்லாத ஊக்கத்தை உடையவனிடம், அவன் இருக்கும் இடத்திற்குரிய வழியைக் கேட்டறிந்து, செல்வம் தானே சென்று அடையும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார வளர்ச்சி வாரியம்.

*வினா எண். 281— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார வளர்ச்சி வாரியம் தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரமென்ன ?

(இ) எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 1980—81-ஆம் ஆண்டில், அரசு, தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை நிறுவ ஆணையிட்டுள்ளது.

(ஆ) இக்கழகம் ரூ. 10 கோடி மூலதனத்துடன் பிற்பட்டோர் மற்றும் குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோரின் நலனுக்காக செயல்பட உள்ளது.

(இ) இக்கழகம் 16—11—1981-ல் இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 1

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார வளர்ச்சி வாரியம் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு என்னென்ன வகையில் வாய்ப்புக்களைத் தருகிறது அல்லது முன்னேற்றத்திற்கான வழிவகைகளைச் செய்ய இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டிற்காக குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார, தொழில் முயற்சிகளுக்கு மார்ஜின் தொகை அளித்தல், பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டிற்காக வர்த்தக, தொழில் ரீதியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற் கொள்ளுதல். இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதியுதவி பெற்று இயங்கும். இக்கழகம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டோர் என்று சொல்லப்படுகின்ற பட்டியலிலே இருக்கின்ற அத்தனை பேர்களும் இதிலே சேர்க்கப்படுவார்களா அல்லது அதிலே ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் எந்தெந்த வகுப்பினர் இணைக்கப்பட்டிருக்கிறார்களோ, அந்த வகுப்பினர்களுக்கு இந்தக் கழகம் கொடுக்கும்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் பட்டியலில் பிராமணர்களைத் தவிர, மற்ற அத்தனை பேர்களும் இப்போது இருக்கிறார்கள். அதனால் உண்மையாக பிற்பட்டோராக இருப்பவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கக்கூடிய சலுகைகள் சென்றடைவதில்லை. ஆகவே, மிகவும் பிற்பட்டோர்களாக ஏற்கெனவே அந்தப் பட்டியலில் இருந்தவர்களுக்கு, குறிப்பாக மீனவர்கள், வன்னியர்கள், அதே போல் பிற ஜாதிக்காரர்களுக்கு அதாவது 1957-ஆம் ஆண்டுப் பட்டியலில் மிகவும் பிற்பட்டோர்களாக இருந்தவர்களுக்கு இந்த வாரியம் செயல்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வாரியத்தை அமைத்த தன்மை, பிற்பட்டோர் நலத்திற்கென்று பொதுவாக அமைத்திருக்கிறோம்.

1982 மார்ச் 1]

ஆனால், நடைமுறையில் செயல்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று, மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு அதன் பயன் செல்லுகின்ற அளவுக்குத் தான் வாய்ப்பிருக்கிறது. இப்போது 39 பிரிவினர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலே வைத்திருக்கிறோம். ஆனால், இதன் மூலம் பலனடைவதற்காக மிகவும் அதிகமான எண்ணிக்கையில் வருகின்ற நிலைமை ஏற்படுகின்றபோது, மிகவும் பிற்பட்டவர்களாக உள்ளவர்களுக்குத் தான் இந்தச் சலுகைகள் அளிக்கின்ற நிலைமை வரும். அதற்கான நடைமுறை விதிகளை பின்னால் நாம் அமைத்துக் கொள்ளலாம்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு பிற்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உப்பிலிநாயகன் சமூகத்தை இதில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு வகுப்பினர் தங்கள் வகுப்பை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள். தவிர, சென்ற ஆண்டு சென்சஸ் கணக்கின் முழு விவரம் இன்னும் வரவில்லை. அதையெல்லாம் பார்த்து தனியாக இதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டும். இந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று 30, 40 பிரிவினர் இப்போது விண்ணப்பித்திருக்கிறார்கள்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பிற்பட்டவர்களுக்குத் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க முன்வரும் இந்த அரசு, இந்தத் தொழில்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு விற்பனைக்கு மார்க்கெட் ஏற்படுத்துவதற்கான முயற்சியினை எடுத்துக் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற் குறிப்பு அரசிடம் இல்லை. ஆனால், நடைமுறையில் வருகின்றபோது, எந்தெந்த வகையில் உதவி செய்யப்படும் என்பது பற்றி இந்த வாரியம் ஆராய்ந்து அறிந்து, தக்க முடிவுகளை எடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினரில் மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களைக் கணக்கெடுத்து, அவர்களுக்கு இந்த வாரியத்தின் மூலம் தனிச்சலுகைகள் அளிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வாரியத்தினுடைய நோக்கங்களை நிறைவேற்றுகின்றபோது, விண்ணப்பங்கள் தரப்படுகின்ற நிலைமையில், அவைகளை ஆராய்கின்றபோது, மிகவும் ஏழ்மை நிலைமையிலே இருக்கின்றவர்கள், மிகவும் சங்கடப்படக்கூடிய நிலைமையிலே இருக்கின்றவர்கள், தொழில் நடத்துவதற்கு வசதியற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். ஆகவே, நடைமுறையில் இந்தத் தன்மை வரும்.

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்பட்ட வகுப்பினர் தமிழகத்திலே நிறைய பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் ஜாதி அடிப்படையில், மிகவும் பிற்பட்டோர் அடிப்படையில், அந்த விகிதாசார முறையில் அரசாங்கத் தரப்பில் உத்திரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற அதிகமாக உள்ள வன்னியப் பெருமக்களும், குயவர்கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 50 சதவிகிதம் கல்வித் துறையிலும், வேலை வாய்ப்புத் துறையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம்; மீதி எல்லா சமூகத்தினருக்கும் சேர்ந்து பொதுவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 50 சதவிகிதம் என்பது பொதுவாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் பொருந்தும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருந்து குற்றப் பரம்பரை அதாவது டீ-நோடிபைட் டிரைப்ஸ் என்பவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலைமையிலே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனி உரிமை கொடுத்து, அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு இந்த அரசு உதவ முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குற்றப் பரம்பரையைச் சார்ந்த அத்தனை பேர்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பொருளாதார வசதியற்றவர்கள், கல்வி வசதியற்றவர்கள் என்று சொல்லுகிறபோது, அவர்களுக்குதனிச் சலுகை அளிக்கபட்டு வருகிறது. இந்தக் கழகத்தின் சார்பாக உதவி

1982 மார்ச் 1]

செய்கிறபோது, நடைமுறை விதிகளை மேற்கொள்ளுகிறபோது, மிகமிகத் தாழ்ந்த, பொருளாதார வசதியற்றவர்களுக்கு உதவி செய்வதே இந்த வாரியத்தின் நோக்கம். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதற்காக பொருள், பணம் வசதி படைத்தவர்கள் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டுமென்பது பொருளல்ல. நடைமுறை விதிகளை வகுக்கும்போது, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் உணர்வின் அடிப்படையில் அந்த விதி முறைகள் வகுக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப் படும்.

ஓட்டல்களுக்கு இன்றியமையாப் பொருட்களை அரசே வழங்கும் திட்டம்.

*வினா எண். 282—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களில் பலகாரம் செய்யத் தேவையான பொருட்களை ஓட்டல்களுக்கு அரசே சப்ளை செய்வதுபற்றி அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். உணவு விடுதிகள் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கும் பட்சத்தில் சில இன்றியமையாப் பொருட்களை அவைகளுக்கு வழங்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் தற்போதுள்ள ஓட்டலில் அரிசி மாவு இல்லாத தோசையும், பருப்பு இல்லாத சாம்பாரும், தேங்காய் இல்லாத சட்னியும், தேயிலை இல்லாத தேநீரும், இன்றைக்கு ஊசிப் போனதை மறுநாள் வடைகறியாகவும் மக்களுக்கு வழங்கப் படுகிறது. ஆகவே, இதனைக் கண்காணிக்க பறக்கும் படை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட ஓட்டலுக்கு எப்படித் தேடிப் போனார் என்பது புரியவில்லை. இருந்தாலும்கூட, ஓட்டல்களில் விற்கப்படுகின்ற பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு அதன் நிர்வாகிகளை அவ்வப்போது அழைத்துப் பேசுகிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், நீங்கள் கூடுமானவரையில் பண்டங்களை கட்டுப் படியாகும் விலையில் கொடுத்தால், குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இப்போது நாங்கள் வெளிமார்க்கெட்டிலே வாங்குவதால், அதன் விலையை அனுசரித்து உயர்த்த வேண்டியிருக்கிறது. இருந்தாலும், ஓரளவுக்கு கட்டுப்படுத்த முயற்சி செய்கிறோம் என்று. ஆகவே,